# மொழியை ஆள்வோம்

## மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"

Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".

"How can you be so sure?" asked Akbar.

Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".

Akbar was placed very much by Birbal's wit.

**Answer:**

### பீர்பாலின் நகைச்சுவையுணர்வு

இந்த நகரத்தில் எத்தனை காகங்கள் இருக்கின்றன? என்று அக்பர் கேட்டார். பீர்பால் ஒரு கணம் கூட யோசிக்காமல் ஐம்பதாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்பது காகங்கள் இருக்கின்றன அரசே என்று பதிலளித்தார். எப்படி உன்னால் உறுதியாகச் சொல்ல முடிகிறது என்றார் அக்பர். உங்களது ஆட்களை வைத்து எண்ணுங்கள் அரசே என்றார். இதை விட அதிகமான காகங்கள் இருந்தால் சில இங்குள்ள தங்களுடைய உறவினர்களைப் பார்க்க வந்திருக்கும். நான் கூறியதைவிடக் குறைவாக இருந்தால், வேறு இடங்களில் உள்ள தங்கள் உறவினர்களைக் காணச் சென்றிருக்கும் என்று அர்த்தம் என்றார் பீர்பால்.

பீர்பாலுடைய நகைச்சுவையையும், நகைச்சுவை உணர்வையும் எண்ணி அக்பர், திருப்தியும், மன மகிழ்வும் அடைந்தார்.

## பிழை நீக்கி எழுதுக :

**Question 1.**

மதீனா சிறந்த இசைவல்லுநர் வேண்டும்

**Answer:**

மதீனா சிறந்த இசைவல்லுநராக வேண்டும்

**Question 2.**

நல்ல தமிழுக்கு எழுதுவோம்

VMHSS

**Answer:**

நல்ல தமிழில் எழுதுவோம்

**Question 3.**

பவள விழிதான் பரிசு உரியவள்.

**Answer:**

பவளவிழிதான் பரிசுக்கு உரியவள்.

**Question 4.**

துன்பத்தால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்

**Answer:**

துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவன் தான் வெற்றியைப் பெறுவான்.

**Question 5.**

குழலியும் பாடத் தெரியும்

**Answer:**

குழலிக்கும் பாடத் தெரியும்.

**இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.**

(எ.கா) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

**Question 1.**

அலுவலர் வந்தார் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

**Answer:**

அலுவலர் வந்தவுடன் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

(அல்லது)

அலுவலர் வந்ததால் அனைவரும் பதற்றம் அடைந்தனர்

VMHSSS

**Question 2.**

சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.

**Answer:**

சுடர்க்கொடியும் மாலனும் பாடினார்கள்.

**Question 3.**

பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.

**Answer:**

பழனிமலையைவிட இமயமலைதான் மிகவும் பெரியது.

**Question 4.**

கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

**Answer:**

கவலையற்ற எதிர்காலம் அமைய வேண்டுமெனில் கல்வியே நிகழ்காலமாக வேண்டும்.

**நிகழ்வினைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

அண்ணாவின் வாழ்க்கையில்....

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்ற அறியாமலே திறந்துகாட்டச் செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகு தான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று, “தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள்” என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம். “இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள்” என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா , “நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது.

இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வர வேண்டும். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றார்.

**Question 1.**

மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?

**Answer:**

மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள் வாழ்த்து மடல்கள் இருந்தன.அவற்றைப் பார்த்த பிறகுதான் வந்திருப்பது அண்ணா என வருவாய் அலுவலர் அறிந்து கொண்டார்.

**Question 1.**

மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?

**Answer:**

மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள் வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் வந்திருப்பது அண்ணா என வருவாய் அலுவலர் அறிந்து கொண்டார்.

**Question 2.**

அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக் கொள்ளச் சொன்னார்?

**Answer:**

முதலமைச்சர் என்று தெரியாமல் சோதனைச்சாவடியில் மகிழுந்தை திறந்து காட்டச் சொன்னதால், என்ன நடக்குமோ என்று அச்சப்பட்டு, தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

**Question 3.**

அண்ணா வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?

**Answer:**

சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்றவர்கள் கையில்தான் இருக்கிறது. உங்களைப் போன்றவர்களே உயர்பதவிக்கு வரவேண்டும் என்று பாராட்டினார்.

**Question 4.**

பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக?

**Answer:**

தான் பதவி உயர்வு வழங்கத்தான் உம் பெயரைக் கேட்டேன். சட்டத்தைக் காக்கும் பொறுப்பு அலுவலரின் கையில்தான் உள்ளது பொறுப்புணர்வுடன் செயல்படும் அலுவலர்கள் நாட்டிற்குத் தேவை.

**Question 5.**

நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பிடுக:

**Answer:**

“பொறுப்புணர்வு” (அல்லது) “கடமையுணர்வு”

**அகராதியில் காண்க.**

(அரங்கு, ஒட்பம், கான், நசை, பொருநர்)

**Answer:**

அரங்கு - அரங்கம், உள்வீடு

ஒட்பம் - அறிவு, அழகு, நன்மை, மேன்மை

கான் - காடு, மணம், வாய்க்கால், இசை

நசை - ஆசை, குற்றம், எள்ளல், ஈரம்

பொருநர் - படைவீரன், தலைவன், போர்க்களத்து சென்று பாடும் கூத்தன்.

**கடிதம் எழுதுக:**

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

VMHSSS

**Answer:**

அனுப்புநர்

மா.இனியன்,

அரசு ஆண்கள் மேல்நி◌ை◌ைலப்பள்ளி,

நாவலூர்.

பெறுநர்

மேலாளர் அவர்கள்,

நெய்தல் பதிப்பகம்,

மதுரை - 16.

ஐயா,

பொருள்: நூலகத்திற்கு அகராதி அனுப்புதல் தொடர்பாக

வணக்கம். எங்கள் பள்ளி நாவலூரில் அமைந்துள்ளது. சுமார் 500 மாணவர்கள் பயில்கின்றோம். எங்கள் பள்ளி நூலகத்திற்கு, தங்கள் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ள, தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பின்வரும் முகவரிக்குப் பதிவு அஞ்சலில் அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறேன்.

நாள்: 06.08.18 இப்படிக்கு,

இடம்: நாவலூர் மா. இனியன்.